சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

முன்னிலை: உயர்திரு.**M. தனபால்.B.A, B.L.,**

சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.763/2022**

அ. கோவிந்தசாமி ... வாதி

/ எதிர் /

1. எம். சுப்பிரமணி
2. கந்தசாமி
3. கிளை மேலாளர் கனரா வங்கி, கொண்டறங்கி கீரனுார் கிளை, (As per amendment in I.A.50/2024 date on 10.09.2024) ... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கு என் முன்னர் 28.11.2024ம் தேதியன்று விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 1,2ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கல்யாணசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், வாதியின் வழக்கு இறுதி வசாரணைக்கு வந்தநிலையில் நடவடிக்கை ஏதும் எடுக்காததால் வாதி அழைத்தும் ஆஜரின்மையால் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கலான.

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கு சொத்துக்கள் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டு வாதியின் தனித்த அனுபவத்தில் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்று விளம்புகை செய்யக்கோரியும், வழக்குச் சொத்துக்ளைப் பொறுத்து 1ம் பிரதிவாதியால் 2ம் பிரதிவாதி 14.09.2004ம் தேதியில் ஏற்படுத்திக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்று விளம்புகை செய்யக்கோரியும், வழக்குச் சொத்தின் அனுபவத்திற்கும் சுவாதீனத்திற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவர்கள் வகை ஆட்களோ ஏஜெண்டுகளோ எவ்வகையிலும் தடையோ, இடைஞ்சலோ செய்யாதிருக்கும் பொருட்டு அவர்கள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகளை செலுத்தி வைக்கக்கோரியும் வாதிகளால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff not present and no representation on the side of plaintiff . Already sufficient tie has been given. Plaintiff not completed the previews order of this court. Plaintiff called absent and the suit is dismissed for default no costs.

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் நாள் வியாழக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2025.03.11 13:21:40 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.